மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: எல்லாவிதமான அறிக்கைகளும் அரசாங்கத்திற்கு வருகின்றன. அவை பரிசீலனையில் இருக்கின்றன. கூடிய விரைவில் முடிவு எடுக்கப்படும்.

திரு. நா. காசிராமன்: அட்டுபாயில், போர்த்தி ஹடா, இந்த கிராமங்களில் உள்ளவர்களை வேற்றிடங்களுக்குக் குடியமர்த்துவதற்கு என்ன முக்கியமான காரணம்? அந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவு எவ்வளவு என்பதைக் கூறமுடியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: இந்த இரண்டு கிராமங்களில் இருந்தவர்களை வேற்றிடங்களுக்கு மாற்றுவதற்கு ஏறத்தாழ ரூ. 4,41,855 செலவு ஆகும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்த இடங்களில் தண்ணீர் பிடிப்பு இருப்பதால், மற்ற இடங்கள் பொதுவாக இடைஞ்சலாக இருப்பதால், அரசாங்கம் ஆலோசனை செய்து அவர்களை வேற்றிடங்களுக்கு மாற்றுவதற்கான திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது. அதற்கான செயற்குறிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. இன்னும் செயற்குறிப்புகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. இல. பலராமன்: இந்த கிராமங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு அரசாங்கம் உதவியாக எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போடவேண்டும். மொத்தமான தொகைதான் என்னிடம் இருக்கிறதே தவிர, தனிப்பட்ட கணக்கு இல்லை. தனிக்கேள்வி போட்டால், தெரிவிக்கப்படும்.

Acknowledgment of complaints from public

* 304 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any press note was issued during the first week of December 1967 on the question of acknowledgment of complaints from the public; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:

(அ) ஆம்.

(இ) வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு *பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, அவர்களுடைய முறைகளைப் பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

* 98-ம் பக்கத்தில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நடவடிக்கைகளைத்தான் இங்கே வைக்கப்படவுள்ள குறிப்பில் எடுத்துக்காட்டியிருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, will the Ministry be pleased to state whether at least important demi-official letters written by M.L.As. to Ministers will be answered by Ministers themselves as suggested by the Administrative Reforms Commission previously presided over by our distinguished Shri Moraji Desai? The Commission has said that Ministers should invariably answer important demi-official letters written by M.L.As. to them. Will the Ministry give respect to those sentiments of the Administrative Reforms Commission and answer all important demi-official letters written by M.L.As?

I will explain further. Supposing an M.L.A. writes a letter to a Minister about miscarriage of justice. At a certain level, at the level of Superintendent or Assistant Secretary, he gets a laconic reply from the concerned department. Instead of that, it would be better if the Minister concerned writes a reply to the concerned M.L.A. Then the M.L.A. will feel satisfied. Will the Ministry give effect to that?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதைப் பற்றி, எம். எல். ஏ.க்கள் எழுதுகின்ற கடிதங்களை ஆராய்ந்து அதனுடைய நிலைகளுக்கு ஏற்ப அவர்களுக்குப் பதில்கள் எழுத வேண்டும் என்று செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம்: சார், எம். எல். ஏ.க்கள் எழுதினால்தான் பதில் சொல்லவேண்டும் என்கிற நியதி இருக்கிறதா அல்லது பொதுவாகவே பொது மக்கள் ஆங்காங்கே இருக்கும் அநியாயத்தைக் குறிப்பிட்டு அமைச்சருக்கு எழுதினால், அதற்கும், 'உங்கள் கடிதம் வந்து சேர்ந்தது, கூடிய சீக்கிரத்தில் நியாயம் பிறக்கும்' என்று அவ்வாறு ஒரு 'அக்னாலட்ஜ்மெண்ட்' எழுதுவதற்கு இந்த அமைச்சரவை முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்த அந்தக் கடிதத்தில் இருக்கும் தன்மைகளைப் பொறுத்து, விஷயங்களைப் பொறுத்து எழுதப்படும்.

THIRU T. MARTIN : Many people may not have the time to present a written complaint to the Minister. Therefore will the Ministry allot one day in a month specifically for hearing complaints orally from the public?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது இவ்வளவு நாட்கள் இருக்கும்போதே, பொது மக்களைச் சந்தித்து, அவர்கள் கோரிக்கைகளை வாங்குவதற்கு காலம் கொடுப்பதில், வேறு காரியங்களைக் கவனிக்க முடியாமல், மந்திரிகள் கஷ்டப்படுகிறார்கள். ஒரு நாள் ஒதுக்குவது என்றால், மந்திரிகள் சிக்கிக் கொண்டால் இன்னும் ஆபத்தாகப் போய்விடும்.